# விருத்தப்பாவின் வளர்ச்சியும் போக்கும்

**இரா.கார்த்திகா**
முனைவர் பட்ட ஆய்வாளர்
இலக்கியத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்
ஆய்வு நெறியாளர் : **முனைவர் ஜெ.தேவி**

**ஆய்வுச் சுருக்கம்**

பதினோறாம் நூற்றாண்டில் அமிர்தசாகரர் இயற்றிய யாப்பருங்கலமும் யாப்பருங்கலக்காரிகையும் யாப்பிலக்கணத்திற்கு இன்றும் மணிமகுடங்களாகத் திகழ்கின்றன. இவற்றுள் யாப்பருங்கலக்காரிகை பாவினங்களைக் குறிப்பிட்டு அதன் இலக்கணங்களையும் மிகத் தெளிவாக விளக்குகிறது.

நால்வகைப் பாக்களான வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா ஆகியவற்றின் இனங்களாக துறை, தாழிசை, விருத்தம் ஆகிய மூன்றினைக் கூறுகின்றது. இவற்றுள் துறை மற்றும் தாழிசையினும் மிகுந்த புகழ்பெற்ற இனமாகக் கருதப்படுவது விருத்தமேயாகும். வெளி விருத்தம், ஆசிரிய விருத்தம், கலிவிருத்தம், வஞ்சிவிருத்தம் இவை முறையே வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பாவின் இனங்களுள் அடங்கும். ஆசிரிய விருத்தம் மற்றும் கலிவிருத்தம் தங்களின் தாயாகிய ஆசிரியப்பாவையும் கலிப்பாவையும் வென்று விட்டன என்று அ.கி.பரந்தாமனார் தனது கவிஞராக என்ற நூலில் குறிப்பிடுகிறார்.

வெண்பாவின் இனமாகக் கருதப்படும் வெளி விருத்தம் அதன் பயன் குறைபாட்டலும் சிறப்பின்மையாலும் மறைந்தொழிந்தது. வஞ்சி விருத்தமோ சிறிதளவே பயன்பாட்டு வழக்கில் இருந்துள்ளது. ஆசிரிய விருத்தமும் கலிவிருத்தமும் பெருவழக்கில் வழங்ல்கி வந்துள்ளன. அதற்கான காரணம் யாதெனில் மக்கள் இசையோடுப் பாக்களைப் படிக்க விரும்பியதேயாகும். இவ்வகை விருத்தப்பாக்கள் அடைந்துள்ள வளர்ச்சி மற்றும் போக்கு நிலைகளை ஆராய்ந்து தெளிவுறுத்தும் நோக்கில் இக்கட்டுரை அமைந்துள்ளது.

**திறவுச் சொற்கள்:** விருத்தம், விருத்தப்பா, சந்தம், விருத்தப்பாவியல், ஆசிரிய விருத்தம், கலிவிருத்தம், வடமொழியும் விருத்தமும்.

## முன்னுரை

நால்வகைப் பாக்களான வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா ஆகியவற்றிற்கு இனங்களாக வகுக்கப்பட்டவை துறை, தாழிசை, விருத்தம் என்பன. இவற்றுள் விருத்தம் என்னும் பாவினப் பெயரை வடமொழி பெயர் என்றும், பெயரால் வடமொழியாய் இருப்பினும் யாப்பால் தமிழுக்கே உரியது என்றும் குறிப்பிடுவார்

பாவாணர். விருத்தம் எனும் பாவினத்திற்கு உரிய இலக்கணம் மட்டுமின்றி, அதன் பெயரான விருத்தம் என்பதும் தமிழுக்கே உரியது என்று விளக்கமளிக்கும் இலக்கணிகளும் தமிழ் உலகில் உள்ளனர். அதற்குச் சான்றாகத் தொல்காப்பியம் கூறும் புதுமை என்னும் பொருள் குறிக்கும் விருந்து எனும் சொல்லே விருத்தம் எனும் சொல்லாக்கத்திற்குக் காரணமாகிப் புதிதாகத் தோன்றி வளர்ந்த யாப்பு வடிவத்திற்குப் பெயராக அமைந்தது எனலாம் என்பார் ச.வே சுப்பிரமணியன். விருத்தம் எனும் பெயர் தமிழே என்றும் வடமொழிச் சொல் என்றும் அது பற்றிய இருவேறு கருத்துகள் உள்ள நிலையில் தமிழ் யாப்புலகில் விருத்தப்பா எனும் வடிவமே மிக மிக அதிகமான இலக்கிய ஆட்சியைப் பெற்று விளங்குகின்றது. துறை, தாழிசை என்ற பாவினத்தின் வளர்ச்சியைக் காட்டிலும் விருத்தமே பெருமளவு வளர்ச்சி அடைந்துள்ளது எனில் அது மிகையாகா. அத்தகைய விருத்தப்பாவின் வளர்ச்சியும் போக்கும் குறித்து ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## விருத்தப்பாவியல் தோற்றப் பின்னணி

வெண்பாவுக்கு உரிய இனமான வெளிவிருத்தம் தவிர்த்து, ஆசிரியவிருத்தம், கலிவிருத்தம், வஞ்சிவிருத்தம் ஆகியன இலக்கிய ஆட்சிப் பெற்றுத் திகழ்ந்தாலும் மற்றைய இரு விருத்தங்களோடு ஒப்பிட்டு நோக்கும் போது வஞ்சி விருத்தங்கள் பெற்றுள்ள இலக்கிய ஆட்சிக் குறைவு என்பதே உண்மையாகும். ஆசிரிய விருத்தமும் கலிவிருத்தமும் மிகவும் அதிக அளவில் இலக்கியத்தைத் தன்னகத்தே ஈர்த்துக் கொண்டுள்ளன.

விருத்தம் என்பது பாவின் அடிப்படையில் வெளி விருத்தம், ஆசிரிய விருத்தம், கலி விருத்தம், வஞ்சி விருத்தம் எனும் வகைகளைப் பெறுவதோடு, ஒவ்வோர் அடிகளில் இடம்பெறும் சீர்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு குறளடி விருத்தம், சிந்தடி விருத்தம், அளவடி விருத்தம், நெடிலடி விருத்தம், கழிநெடிலடி விருத்தம் எனும் வகைப்படுத்தப்படுவதும் யாப்பருங்காரிகைக்குப் பிற்பட்ட யாப்பிலக்கண வளர்ச்சி நிலைகளை ஆய்ந்தறியும் போது புலனாகிறது. ஆசிரிய விருத்தம், கலி விருத்தம் ஆகிய இரு பாவினங்களும் அதிகமான இலக்கிய ஆட்சியைப் பெற்றுத் திகழ்வதால், அவற்றின் இலக்கண வரையறைகளைத் தெளிவுற எடுத்துரைக்க விருத்தப்பாவியில் எனும் தனிநூல் உருவாக்கம் பெற்றது என்பது யாப்பியல் வரலாற்றில் மைல்கல் எனலாம்.

## ஆசிரிய விருத்த இலக்கண வளர்ச்சி

ஆறுசீர்களைக் கொண்ட அடி அமைப்பிலும் அதற்கும் மேற்பட்ட அடி அமைப்பிலும் அமைவன ஆசிரிய விருத்தங்கள் ஆகும். ஆறு சீர்களைக் கொண்ட அடிகளையும் அதனினும் மேற்பட்ட சீர்களைக் கொண்ட அடிகளும் கழிநெடில் அடிகள் ஆதலால் ஆசிரியர் விருத்தங்கள் கழிநெடில் விருத்தங்கள் என்ற பெயராலும் வழங்கப்படுகின்றன. கழிநெடிலடி ஆசிரிய விருத்தங்களைக் குறுங் கழிநெடிலடி ஆசிரிய

ISSN: 2320-4842
Vol-18 No. 02 April-June 2024

விருத்தங்கள் நெடுங் கழிநெடிலடி ஆசிரிய விருத்தங்கள் என்ற முறையில் வகைப்படுத்தும் வழக்கமும் பல்வேறு யாப்பியல் இலக்கணிகளிடம் நிலவியுள்ளது.

பதினொரு சீருக்கு மேல் அமையும் கழிநெடிலடி ஆசிரிய விருத்தங்களை, இரட்டை விருத்தம் என வகைப்படுத்தும் முறையும் இருந்துள்ளது என்பது வீரசோழிய உரையால் அறிய முடிகிறது. இது மட்டுமல்லாது இரட்டை விருத்தங்கள் எனும் பெயர் பெரும்பாலும் இரட்டை ஆசிரிய விருத்தங்கள் என்றும் வழங்கப்படுகின்றன.

யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை ஆகியனவும் அவற்றின் உரைகளும் கழிநெடிலடி நான்கு அளவொத்து வருதல் ஆசிரிய விருத்தமாகும் என மிக மிகச் சுருக்கமாக விருத்தம் எனும் பாவினத்திற்கு இலக்கணம் உரைக்கின்றன. இவ்வகையிலான விளக்கங்கள் ஆசிரிய விருத்தத்தைப் பற்றி முழுமையான அமைப்பையோ அதனுள் காணலாகும் வகைமைகளையோ விளக்கக் கூறும் அளவுக்குப் போதுமானதாக இல்லை. யாப்பருங்கலகாரிகைக்குப் பின் தோன்றிய தொன்னூல் விளக்கம், செந்தமிழ், விருத்தப்பாவியல், கவிஞராக, கவி பாடலாம், யாப்பு நூல், எளிதாகப் பாடலாம், பாவலர் பண்ணை ஆகிய நூல்களே ஆசிரிய விருத்தங்களின் முழுமையான மற்றும் தெளிவான அமைப்பையும் வகைகளையும் விளக்கி இலக்கணம் கூறும் முயற்சியைச் செய்துள்ளன.

## விருத்த அமைப்பு இலக்கணம்

விருத்தங்களின் பொது அமைப்பினை விலக்கி இலக்கணம் கூறும் முயற்சியைத் தொன்னூல் விளக்கமே முதலில் மேற்கொண்டுள்ளது. குறிப்பிட்ட சீர் வாய்பாட்டு அமைப்பினைப் பின்பற்றி நான்கு அடிகளிலும் சீர்கள் முறை பிறழாமல் அமைக்க பெற வேண்டும் என்பதே விருத்தத்தின் பொது அமைப்பு இலக்கணம். எடுத்துக்காட்டாக விளம் மா தேமா விளம் மா தேமா என்னும் வாய்பாட்டினைப் பின்பற்றி அமைக்கப்படும் ஒருவகை ஆசிரிய விருத்தத்தில் ஒவ்வொரு அடியின் அறு சீர்களும் இதே வாய்பாட்டினைப் பின்பற்றி அமைக்க பெற வேண்டும். முதல் அடியின் மூன்றாம் சீரும், ஆறாம் சீரும் தேமாச்சீர்களாயின் மற்றைய மூன்று அடிகளிலும் மூன்றாம் சீரும், ஆறாம் சீரும் தேமா சீர்களாகவே அமைய வேண்டும்.

தமிழின் முத்தமிழ்க் காப்பியமான சிலப்பதிகாரத்தை தொடக்கமாக கொண்டு தோற்றம் பெற்று சிறு சிறு மாற்றங்களுடன் தொடர் வளர்ச்சிநிலையை எய்தி மிகவும் வழக்கும் செல்வாக்கும் பெற்ற விருத்தம் எனும் பாவின யாப்புக்கெனத் தனியாகவும் விரிவுபடவும் இலக்கணம் வகுத்த ஒரே நூல் என்றும் முதல் நூல் என்றும் அறியப்படுவது 1885- இல் தி.வீரபத்திர முதலியாரால் இயற்றப்பட்ட விருத்தப்பாவியல் எனும் நூலேயாகும். இலக்கண நுவல் பொருளாலும், விதிகூறும் நூற்பாக்களின் அமைப்பு முறையாலும் தமிழ் யாப்பிலக்கண நூல்களிடையே தனித்து விளங்கும் இதனை ச.வே. சுப்பிரமணியன் பிற யாப்பிலக்கண நூல்களைப் போலன்றி, யாப்பின் ஒரு தனிக் கூறுக்கு இலக்கணம் வகுக்கின்றது. விதிகளே சான்றுகளாகவும் அமையும்படி இந்நூல்

யாக்கப்பட்டுள்ளது. தமிழ் யாப்பைப் பொறுத்தவரை இது புது முயற்சியாம் என்று கூறுகிறார்.

புரசை அட்டாவதானம் சபாபதி முதலியார், சென்னை சர்வகலாச்சாலைத் தமிழ்த் தலைமைப் புலமை நடத்திய கோ. இராசகோபாலப்பிள்ளை போன்றோர் இயற்றிய சாத்துக்கவிகள் இந்நூலின் தொடக்கத்தில் இடம்பெற்றுள்ளன. மேலும் அதனைத் தொடர்ந்து விருத்தப்பாவியலின் ஆசிரியரான வீரபத்திர முதலியாரின் ஆங்கில முகப்புரை இடம் பெற்றுள்ளது. இந்நூலில் 12 படலங்களும் அவற்றுள், ஏழு கலிவிருத்தத்தால் உருவான அவையடக்கப் பாடல்களும், விருத்தம் மற்றும் கலித்துறையால் அமைந்த 76 நூற்பாக்களும் இடம்பெறுகின்றன. இந்த நூற்பாக்கள் பெரும்பாலும் முழு பாடல்களாக இல்லாமல், ஓரடி, ஈரடி பகுதிகளாக அமையபெற்றுள்ளன. பெரும்பாலான நூற்பாக்கள் மகடூஉ முன்னிலை கொண்டே இயற்றப்பட்டுள்ளன. இதன் 12 படலங்களும் முறையே,

அறுசீர்க் கழிநெடில் விருத்தம், கலித்துறை, எழு சீர் கழிநெடில் விருத்தம்,. எண்சீர் கழிநெடில் விருத்தம், கலிவிருத்தம், சந்தவுறுப்புயல், கலிச்சந்த விருத்தம், சந்தக் கலித்துறை, அறுசீர் சந்த விருத்தம், எழுசீர் சந்த விருத்தம், எண்சீர் சந்த விருத்தம், ஒழிபியல் எனும் தலைப்புகளைக் கொண்டு அமைந்துள்ளன. இந்நூல், தான் கூறும் பா வகையின் இலக்கணத்தை அதே பாவின் வடிவிலேயே தருவது சிறப்பிற்குரியது.

நூலின் பெயர் விருத்தப்பாவியில் என அமைந்திருப்பினும் துறை எனும் பாவினத்தில் குறிப்பிடத்தக்க ஒன்றான கலித்துறைகளின் இலக்கணங்களையும் உள்ளடக்கிய நூலாக இந்நூல் திகழ்கிறது. விருத்தப்பாக்கள் பெறும் சீர் வாய்பாடுகளைப் போலவே கலித்துறைகளும் சீர் வாய்பாட்டு அமைப்பைப் பெற்று விளங்குவதால் அவற்றுக்கு விருத்தக் கலித்துறை எனும் பெயரும் வழங்கப்பட்டு வருவதால் இந்நூல் கலித்துறைகளுக்கும் இலக்கணம் கூறுகின்றது என எடுத்துக் கொள்வது பொருந்தும். ஆழ்ந்து நோக்கினால் விருத்தங்களில் ஆசிரிய விருத்தங்களுக்கும் கலிவிருத்தங்களுக்கு மட்டுமே இஃது இலக்கணம் கூறியுள்ளது. தமிழ் யாப்பிலக்கண நூல்கள் சீர் வாய்பாட்டால் அமைந்த விருத்தங்களையே கருத்தில் கொண்டு இலக்கணம் கூறிச் செல்ல, இந்நூல் அவற்றோடு சந்த விருத்தங்களுக்கும் சந்தக் கலித்துறைகளுக்கும் இலக்கணம் கூறுகின்றது என்பது நோக்கத்தக்கது.

தமிழுக்கு மட்டுமே உரித்தான சீர் வாய்பாட்டு விருத்தங்களுக்கும் சந்த விருத்தங்களுக்கும் இலக்கணம் கூறுவதோடு, தமிழ் - வடமொழி ஆகிய இரண்டிலும் பொதுவாக அமைந்துள்ள சந்த விருத்தங்களுக்கும் இஃது இலக்கணம் கூறுகின்றது. அவற்றுல் சில பொதுவான சந்த விருத்தங்களுக்கு மனோரமா, தோடகம், காந்தி, மணிரங்கம், சுத்த விராட்டு, வனமயூரம், மதனார்த்தை முதலிய வடமொழி சார்ந்த பெயர்களைச் சுட்டுவது ஆராயத்தக்கது. எண்சீர் வரை உள்ள ஆசிரிய விருத்தங்களுக்கு இலக்கணம் வகுத்து உரைக்கின்றது. ஒரு பாடலின் அடியானது நேரசையில் தொடங்கினால் 14 எழுத்துகள் அமைய வேண்டும், நிரை அசையில் தொடங்கினால் 15

எழுத்துகள் அமைய வேண்டும் எனும் அமைப்புடைய கலித்துறை இலக்கணமும், அதே போன்று எழுத்தெண்ணிக்கை அடிப்படையில் கலிவிருத்தமானது ஓர் அடி நேரசையில் தொடங்கினால் 11 எழுத்துகளும், நிரை அசையில் தொடங்கினால் 12 எழுத்துகளும் பெற வேண்டும் எனும் இலக்கணமும் இந்நூலின் விளக்கப்பட்டுள்ளன.

விருத்தப்பாவியல் கூறும் சந்த உறுப்புகள் யாவும் வடமொழியில் காணலாகும் யாப்பியல் விதிகளின் அடிப்படையில் மாத்திரை அலகைக் குறிப்பிடுகின்றன. மேலும் வண்ண உறுப்புகளில் இருந்து வேறுபட்டுக் காணப்படுகின்றது.

## சந்தயாப்பும் விருத்தப்பாவியலும்

வடமொழிச் சந்த யாப்பின் அடிப்படையில் சில பாவினங்களை வகைப்படுத்தி அவற்றுக்கு இலக்கணங்கூறும் முயற்சியை விருத்தப்பாவியல் மேற்கொண்டுள்ளது. தமிழில் இடம்பெற்றுள்ள விருத்தம் முதலான பாவினங்களில் சில வகைகளைத் தமிழ் யாப்பலகுகளால் துல்லியமாக விளக்க முடிவதில்லை என்றும் அவற்றைச் சந்த யாப்பின் மாத்திரை அலகின் துணை கொண்டு விளக்க முடிவதாகவும் குறிப்பிட்டுத் தி.வீரபத்திர முதலியார் சில பாவின வகைகளை விளக்கும் வகையில் தமது விருத்தப்பாவியலில் இலக்கணம் வகுத்துள்ளார்.

பாவின வகைகள் சிலவற்றை வடமொழிச் சந்தயாப்பின் மாத்திரை அலகைப் பயன்படுத்தித் தெளிவாக விளக்க முடிவதாகக் கொண்டு விருத்தப்பாவியல், கலிவிருத்தம், கலித்துறை, ஆசிரிய விருத்தம் ஆகியவற்றின் சில வகைகளைச் சந்தக் கலிவிருத்தம், சந்தக் கலித்துறை, அறுசீர்ச் சந்தவிருத்தம், எழுசீர்ச் சந்தவிருத்தம், எண்சீர்ச் சந்தவிருத்தம் எனப் பெயரிட்டு இலக்கணங் கூறுகின்றது.

கலிவிருத்தம், கலித்துறை, ஆசிரிய விருத்தம் முதலிய தமிழ்ப் பாவினங்களில் சந்த யாப்பமைதி இடம்பெற்றுள்ளது என விருத்தியுரையும் வீரசோழியவுரையும் பொதுப்படக் காட்டிச் செல்ல, விருத்தப்பாவியலே தமிழ் யாப்பியலில் முதன்முறையாகச் சந்த யாப்பமைதியை அடிப்படையாகக் கொண்டு தமிழ்ப் பாவினங்களைச் சந்தக் கலிவிருத்தம், சந்தக் கலித்துறை, அறுசீர்ச் சந்தவிருத்தம், எழுசீர்ச் சந்தவிருத்தம், எண்சீர்ச் சந்தவிருத்தம் என வகைப்படுத்திப் பெயரிட்டு ஒவ்வொன்றின் இலக்கணத்தையும் வகைகளையும் எடுத்துரைக்கின்றது. விருத்தப்பாவியலின் உரை, பன்னிருசீர்ச் சந்தவிருத்தம், சந்த வஞ்சிவிருத்தம் ஆகியவற்றின் இலக்கணத்தையும் பேசுகின்றது. இது ஒரு வளர்ச்சி நிலையாகும்.

தமிழ்ப் பாவினங்களின் சில வகைகளில் வடமொழிச் சந்தயாப்பு அமைந்துள்ளதாகவே விருத்தியுரையும், வீரசோழிய உரையும் காட்டிச் செல்ல, விருத்தப்பாவியல் மட்டும் தமிழ்ப் பாவினங்களின் சில வகைகளில் வடமொழிச் சந்தயாப்பு மட்டுமல்லாமல் தமிழுக்கேயுரிய சந்தயாப்பும் அமைந்துள்ளது. எனக் குறிப்பிட்டுக் காட்டுதல் தனித்துச் சுட்டத்தக்கதாகும். ஒருவகைச் சந்தக் கலிவிருத்த

அமைப்பை, வடமொழியில் கூறப்படாத அமைப்பு, தமிழுக்கேயுரியது என விதந்துரைக்கும் 'விருத்தப்பாவியலி'ன்,

**வேதப் பொருளார் விண்டோய் மொழியார்**
**ஓதிற் றிலரீ தோதுந் தமிழே**
**தீதற் றநறுந் தேமா புளிமா**
**பேதைக் குணமார் பின்றாழ் குழலே (வி.பா. ஏழாம் படலம். நூ.5)**

என்னும் இலக்கணமும், வெண்டளை பெற்று அமையும் ஒருவகைச் சந்தக் கலிவிருத்தத்தைத் தமிழுக்கேயுரிய வகையாய்ச் சுட்டியுரைக்கும் விருத்தப்பாவியலின்.

**நாலக் கரமா நவில்வெண் டளையிற்**
**சாலப் பகர்வார் தமிழ்நா வலரே (வி.பா.ஏழாம் படலம். நூ.3)**

என்னும் இலக்கணமும் தனித்துக் காணத்தக்கன. சந்தப் பாவினங்களை விருத்தப்பாவியல் வெண்டளை முதலிய பண்புகளையுடைய தமிழுக்கேயுரியன, வடமொழி மாத்திரையமைதியால் விளக்கத்தக்க வகையில் தமிழ், வடமொழி இரண்டிலும் காணப்படும் வகையின என இருநிலைகளில் பேசுகின்றது.

விருத்தியுரையும் வீரசோழிய உரையும் சந்தப்பாக்களின் ஒவ்வோர் அடியும் பெறும் எழுத்து, எழுத்தலகுகளின் எண்ணிக்கையை ஒட்டு மொத்தமாகப் பேச, விருத்தப்பாவியலோ பாடலடிகளின் ஒவ்வொரு சீரும் பெறும் மாத்திரையெண்ணிக்கை பற்றிப் பேசுகின்றது. ஒவ்வொரு சீரின் மாத்திரையளவையும் விருத்தப்பாவியல் வரையறுத்துப் பேசுதல் சந்தயாப்பிலக்கண வளர்ச்சியில் குறிப்பிடத்தக்கது.

வடமொழியில் 'சந்தசு'கள் எழுத்துகளின் எண்ணிக்கையை மட்டும் அடிப்படையாகக் கொண்டவை; விருத்தங்கள் எழுத்தெண்ணிக்கையோடு அவற்றின் மாத்திரையையும் அடிப்படையாகக் கொண்டவை. சந்தசு, விருத்தம் இரண்டின் இலக்கணமும் சந்தம் எனும் யாப்புவகை இலக்கணமாக விருத்தியுரை, வீரசோழியவுரை, 'விருத்தப்பாவியல்' ஆகியவற்றில் ஒருசேரப் பேசப்பட்டுள்ளன.

இருமொழியிலும் பொதுவான மாத்திரையமைதியால் விளக்கத்தக்கனவாய்க் காணப்படும் சந்தப்பாக்களின் வகைகளுள் வடமொழியில் வழங்கும் வகைப்பெயர்களையே தமிழில் காணப்படும் வகைகளுக்கும் 'விருத்தப்பாவியல்' சூட்டியுள்ளது.

சந்தக் கலிவிருத்தங்களில் மனோரமா, தோடகம், காந்தி, தோதகம், சம்பகமாலா, வித்யுன்மாலை, மணிரங்கம், சம்மதம், சுத்தவிராட்டு, வனமயூரம், நவநந்தினி, சுவாகதம், இரதோத்தம், மதனார்த்தை, அதிகரிணீ, மணிமாலை, சிரக்விணீ ஆகிய வடமொழி வகைப்பெயர்களாலும், சந்தக் கலித்துறைகளில் சேணி, நளினீ, மத்தமயூரம், அஸ்வகதி ஆகிய வடமொழி வகைப்பெயர்களாலும், எழுசீர்ச் சந்த விருத்தங்களில் சுகந்தி, உத்சாகம், மானினி, கவிராச விசாசிதம், சாத்துவி, மணிமாலம் மத்த கோகிலம் ஆகிய வடமொழி

வகைப் பெயர்களாலும், வடமொழியிலுள்ள சந்த அமைப்புகளை ஒத்தனவாகத் தமிழில் காணப்படும் வகைகளை 'விருத்தப் பாவியல்' குறிப்பிட்டுள்ளது. இவ்வகைகளுக்குச் சமய இலக்கியங்களிலிருந்து சில பாக்களைச் சான்றாக எடுத்துக்காட்டி அவற்றில் வடமொழிச் சந்தயாப்பிலக்கணத்தைப் பொருத்திக் காட்டுகின்றது.

வடமொழியில் உள்ளவற்றையொத்த வகைகளாகக் குறிப்பிடப்படுபவற்றின் இலக்கணங் கூறும்போதும், வடமொழி மாத்திரை இலக்கணத்தோடு நிரை, நேர், தேமா, புளிமா, கூவிளம், மாச்சீர், புளிமாங்கனி முதலிய அசை,சீர் வாய்பாடுகளையும், வெண்டளை எனும் உறுப்பையும் கூறியே அவற்றின் அமைப்பை 'விருத்தப்பாவியல்' விளக்குகின்றது. வடமொழியின் மாத்திரை அலகால் மட்டுமே சந்தப்பாவினங்களின் அமைப்பை விளக்க முடிவதில்லை என்பதையும், சந்தப்பாவின அமைப்புகளை விளக்கத் தமிழ் யாப்பலகுகளோடு வடமொழி மாத்திரை அலகும் துணைசெய்கின்றது என்பதையும் இவ்வாறு இலக்கணங்கூறும் போக்குக் காட்டி நிற்கின்றது.

நான்கு மாத்திரைப் புளிமாச்சீர் மூன்று முதல் மூன்று சீர்களாகவும் நெட்டெழுத்தீற்று ஆறுமாத்திரைப் புளிமாங்காய்க் சீர் நான்காம் சீராகவும் அமைதல் என்பது ஒருவகைச் சந்தக்கலிவிருத்தத்தின் இலக்கணம் ஆகும் (வி.பா.ஏழாம் படயம் .6).

சில இடங்களில் மெல்லின ஒற்று அலகுபெறுவதையும் சில இடங்களில் அலகுபெறாமையையும், சில இடங்களில் இடையின ஒற்று அலகுபெறுவதையும் சில இடங்களில் அலகு பெறாமையையும் 'விருத்தப்பாவியலின் பல எடுத்துக்காட்டுப் பாக்களே காட்டுகின்றன. தமிழ் யாப்பலகான சீர்வாய்பாட்டால் சந்தப் பாவினங்களைத் துல்லியமாக விளக்க முடியவில்லை என்று கூறப்படுகிறது. அதைப் போலவே வடமொழி யாப்பலகான மாத்திரை இலக்கணத்தாலும் சந்தப்பாவினங்களைத் துல்லியமாக விளக்கமுடியவில்லை என்பதையே சில எழுத்துகள் அலகுபெறாத விதிவிலக்குகள் உணர்த்துகின்றன. அவ்விதிவிலக்குகளும் ஒரு பாடலுக்குள்ளேயே ஒழுங்கற்ற விதத்தில் கொள்ளப் பட்டிருப்பதும் அவ்விலக்கணத்தின் தெளிவின்மையைக் காட்டுகின்றது.

பாவினச் செய்யுள்களுள் ஓசைநயமிக்க சில வகைகளைச் சந்தப் பாவினங்கள் எனக் குறிப்பிட்டு, அவற்றை மரபான சீர்வாய்பாட்டு இலக்கணத்தால் முழுமையாக விளக்க முடிவதில்லை என்று கூறி, அவற்றை முழுமையாக விளக்கத் தமிழ் பாப்பலகுகளோடு வடமொழிச் சந்த மாத்திரையிலக்கணத்தையும் பயன்படுத்தியுள்ளது 'விருத்தப்பாவியல்'. எனினும் தமிழ் யாப்பலகுகளைக் கொண்டு துல்லியமாக விளக்க முடியவில்லை என்று கூறப்படுவதைப் போலவே வடமொழிச் சந்த மாத்திரை இலக்கணத்தைக் கொண்டும் சந்தப் பாவினங்களைத் துல்லியமாக விளக்க முடியாமையை 'விருத்தப்பாவியலே' சில இடங்களில் உணர்த்துகின்றது.

தமிழில் காணப்படும் சந்தப் பாவினங்கள், 'விருத்தப்பாவியலில் வடமொழி யாப்பினையும் தமிழ் யாப்பினையும் இணைத்துப் பயன்படுத்தி விளக்கப்பட்டுள்ளன.

இருமொழி யாப்பின் துணை கொண்டு விளக்கும் முயற்சி சில இடங்களில் பொருந்துவதாகவும் சில இடங்களில் பொருந்தாததாகவும் அமைகின்றது.

தமிழ் விருத்த யாப்பும் வடமொழி விருத்த யாப்பும் வேறு பட்டதெனினும், "எழுத்தெண்ணிப் பாடப்பெறும் சில விருத்த வகைகளும் யாப்பு வடிவங்களும் வடமொழிவழித் தமிழாசிரியர்களின் முயற்சியால் தமிழில் கொண்டு வரப்பட்டிருத்தல் வேண்டும் என்பார் சோ. ந. கந்தசாமி. 'விருத்தப்பாவியலி'ன் முயற்சியால் வடமொழிச் சார்பு பற்றி "மாத்திரையின் அடிப்படையிலும் எழுத்தினடிப்படையிலும் வடமொழியில் அமைந்த மாத்ரா, வர்ண விருத்தங்களின் செல்வாக்கும், தாக்குதலும் இங்குத் தெளிவாகவே தென்படுகின்றன; வெளிப்படையாகக் கூறவும்படுகிறது"" என்பார் ச.வே. சுப்பிரமணியன்.

எனினும் இத்தொடர்பில் தெ.பொ.மீனாட்சிசுந்தரனார் விருத்தங்கள், சந்த விருத்தங்கள் முதலியன வடமொழிச் சார்பில் தோன்றியன அல்ல என்பதையும், அவற்றுக்கு வடமொழி இலக்கணத்தைப் பொருத்திப் பார்க்கும் முயற்சிகளே நிகழ்ந்துள்ளன என்பதையும் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

விருத்தங்கள் வடமொழிச் சார்பால் எழுந்தவை என்பது உண்மை அன்று. எனினும், இவற்றை வடமொழிக் கண்கொண்டு பின்னாளில் இலக்கணப் புலவர்கள் ஆராய்ந்தனர்; வடமொழியை ஒட்டியே, சென்ற நூற்றாண்டில் எழுந்த விருத்தப்பாவியல் ஆராய்ந்தது. ஆனால் வெண்டளை வந்து ஒலியை நிரப்புவதனைக் கண்டால் வடமொழியையே புகலிடமாக அடைய முடியாது என்பது தெளிவாம். சந்த விருத்தம், தாண்டகம், எழுத்தொத்த அடிகள் வரும் விருத்தம், மாத்திரை ஒத்த அடிகள் வரும் விருத்தம், சீர் ஒத்த அடிகள் வரும் விருத்தம் எனப் பலவாறு விருத்தங்கள் பெருகின. இவற்றிற்குப் பெயரிடுவதிலும் குழப்பம் பெருகியது."

## முடிவுரை

சீர்வாய்பாட்டு அமைப்பைப் பின்பற்றும் பாவினங்களிலிருந்து சற்றே வேறுபட்ட, ஓசையினிமையுடைய பாவினங்களைச் சந்தப் பாவினம் எனும் மரபு தோன்றியுள்ள நிலையில் அவற்றை இசையிலக்கண அடிப்படையில் விளக்கும் முயற்சிகளுக்கு வாய்ப்புள்ளது. தமிழ் யாப்பிலக்கண வரலாற்றில் சந்தப் பாவினங்கள் குறித்த இலக்கணங்கள் வடமொழிச் சார்பு நிலையிலும், தமிழுக்கே தனித்தமைந்தவை என்னும் நிலையிலும் கூறப்பட்டும், இருமொழி யாப்பலகுகளைப் பயன்படுத்தி விளக்கப்பட்டும் சில வளர்நிலைகளை அடைந்துள்ளன. இருமொழிகளிலும் இடம் பெற்றுள்ள சந்த யாப்பின் தோற்றம், தொடர்பு குறித்துத் தெளிவுபடுத்தும் வகையிலான ஒப்பியல் மேலாய்வுகளுக்கு இக்களத்தில் இடமுள்ளது.

**மேற்கோள் நூல்கள்**

1) கந்தசாமி.சோ.ந., தமிழ் யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
2) குமாரசாமிப் புலவர்.அ, யாப்பருங்கலக் காரிகை குமாரசாமிப்புலவர் உரை, இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களம்,1938
3) பரந்தமனார் அ.கி, கவிஞராக, பாரி நிலையம், சென்னை , 2007
4) பவானந்தம்பிள்ளை. (ப. ஆ).,யாப்பருங்கல விருத்தியுரை, லாங்மேன் கீரீன்ஸ் அச்சகம், சென்னை. (1916)
5) மணிகண்டன்.யா (நூ.ஆ), தமிழ் யாப்பிலக்கண வரலாறும் வளர்ச்சியும், காலச்சுவடு பதிப்பகம், சென்னை-2017